**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி.கா.பாரதி, M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.**

**2025ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை**

**அ.வ.எண்.214/2018**
**( TNDG07-000589-2018 )**

பாண்டிசெல்வி --- வாதி

எதிர்

1.காமாட்சி அம்மாள்,
2.பாலமுருகன்,
3.செந்தில்குமார்,
4.பாண்டீஸ்வரி,
5.பாண்டியராஜன்,
6.ரத்னப்பிரியா,
7.நாட்ராயன்,
8.ராஜாத்தி,
9.தனலட்சுமி,
10.வருவாய் கோட்டாட்சியர், பழனி.
11.இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும்
ஹோமியோபதி, சென்னை. --- பிரதிவாதிகள்

**இந்த வழக்கானது கடந்த 22.06.2018ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில், என் முன்பாக வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் G.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் N.திருமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 7ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 8 மற்றும் 9 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால்**

தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் 1 முதல் 6, 10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–ஐ 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டிய நிலையில், 7ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை 12 மற்றும் 13 பிரதிவாதிகளாக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பிராதை திருத்தம் செய்ய வாதிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், பிராதை திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்யாததாலும், வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

தாவாச் சொத்து குறித்து வாதியின் பாட்டி குருவம்மாள் (எ) லட்சுமி கடந்த 04.05.1963ம் தேதி எழுதிக்கொடுத்த பழனி சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண்.675/1963 ஆவணமானது செல்லத்தக்கதல்ல என்றும், அதை ரத்து செய்தும் விளம்புகை செய்யும்படி கோரியும், தாவாச் சொத்து குறித்து வாதியின் தகப்பனார் சுப்பிரமணியன் அவர்கள் கடந்த 01.10.1991ம் தேதி எழுதிக்கொடுத்த பழனி 2நிர் இணை சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண்.58/1991 ஆவணமானது செல்லத்தக்கதல்ல என்றும், அதை ரத்து செய்தும் விளம்புகை செய்யும்படி கோரியும், தாவாச் சொத்துக்கள் குறித்து 10, 11 பிரதிவாதிகள் வசமுள்ள நஷ்டஈடு தொகைகளை இவ்வழக்கு தீர்ப்பு பகரும் வரை 7ம் பிரதிவாதிக்கோ அல்லது மற்ற நபர்களுக்கோ வழங்கக்கூடாது என நிரந்தர தடை உத்தரவு வழங்கும்படி கோரியும், இந்த வழக்கின் செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இவ்வழக்கின்

**தன்மைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப இதர பரிகாரங்கள் வழங்கும்படி கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**இவ்வழக்கு 7ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை 12 மற்றும் 13 பிரதிவாதிகளாக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பிராதை திருத்தம் செய்ய வாதிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், பிராதை திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்யாததாலும், வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை பற்றிய உத்தரவு இல்லை.**

**இந்த தீர்ப்புரை இன்று 26.06.2025ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.**

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.06.26 18:19:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**